செ.வெ.எண்:1 நாள்: 01.11.2017

**பத்திரிக்கைசெய்தி**

**தமிழ்நாடுஅரசு**

**மீன்வளத்துறை**

**மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேருவதற்கான போட்டித் தேர்வில் சிறப்பிக்க ஆயத்தபயிற்சி அளித்தல்.**

மாண்புமிகு அமைச்சர் ( மீன்வளம் ,நிதிபணியாளர் மற்றும் நிருவாகசீர்திருத்தம் ) அவர்கள் 11.07.2017 அன்று சட்ட பேரவையில் அறிவித்ததில் மீன்வளத்துறை மற்றும் சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் (அகில இந்திய குடிமைப்பணிக்களுக்கான பயிற்சி நிலையம்) இணைந்து ஆண்டுதோறும் மீனவ கூட்டுறவு சங்க கடல் மற்றும் உள்நாட்டு மீனவ சமுதாயத்தைச் சார்ந்த படித்த 20 பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து தனிக்குழுவாக அமைத்து அவர்களுக்கு இந்திய குடிமைப்பணிக்கான போட்டித் தேர்வில் கலந்துகொள்ள ஏதுவாக பிரத்யேக பயிற்சி அளித்திடும் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு ஆணைவழங்கியுள்ளது.

கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவுசங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் குழந்தைகள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பபடிவம் மற்றும் அரசு வழிகாட்டுதல்களை மீன்வளத்துறையின் இணையதளமானwww.fisheries.tn.gov.inலிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்பபடிவங்களை மண்டல மீன்துறை துணை/இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் நேரில் விலையின்றி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் மீன்துறை இணையதளத்தில் உள்ள விரிவான அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பூர்த்திசெய்து, உரியஆவணங்களுடன் 05.11.2017 பிற்பகல் 05.00 மணிக்குள் திருச்சி மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம் , எண்.4, காயிதேமில்லத் தெரு, காஜாநகர், திருச்சிராப்பள்ளி-20, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**